www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

வகுப்பு : 12

தேர்வு எண் 1 2 3 0 1

# அரையாண்டுப் பொதுத் தேர்வு - 2024-25

நேரம் : 3.00 மணி]

## கணக்குப்பதிவியல்

[மொத்த மதிப்பெண்கள் : 90

I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. 20x1=20

1. தொடக்கநிலை அறிக்கை வழக்கமாக தயாரிக்கப்படுவது.
   அ) தொடக்க முதல் கண்டறிய ஆ) இறுதி முதல் கண்டறிய
   இ) அவ்வாண்டின் இலாபம் கண்டறிய ஈ) அவ்வாண்டின் நட்டம் கண்டறிய
2. கடனாளிகள் தொடக்க இருப்பு : ரூ. 30,000 பெற்ற ரொக்கம் ரூ. 1,00,000, கடன் விற்பனை ரூ. 90,000 ; கடனாளிகள் இறுதி இருப்பு :?
   அ) ₹ 30,000 ஆ) ₹ 1,30,000 இ) ₹ 40,000 ஈ) ₹20,000
3. பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கின் இருப்பு காட்டுவது
   அ) அந்த ஆண்டில் ஏற்பட்ட நட்டம் ஆ) அந்த ஆண்டின் செலவுகளைக் காட்டிலும் மிகுதியான வருமானம்
   இ) அந்த ஆண்டின் மொத்த ரொக்கச் செலுத்தல்கள் ஈ) அந்நாளைய ரொக்க மற்றும் வங்கி இருப்பு
4. ஒரு மன்றத்தில் உள்ள 500 உறுப்பினர்கள், ஆண்டு சந்தாவாக ரூ 100 செலுத்துகின்றனர். நடப்பாண்டில் கூடியுள்ள சந்தா இன்னமும் பெறப்படாதது ரூ200; முன்கூட்டிப் பெற்ற சந்தா ரூ300 வருவாய் மற்றும் செலவினக் கணக்கில் காட்டப்பட வேண்டிய சந்தா தொகையினைக் கண்டறியவும்.
   அ) ரூ 50,000 ஆ) ரூ 50,200 இ) ரூ 49,900 ஈ) ரூ 49,800
5. கூட்டாளிகளிடமிருந்து நிறுவனம் கடன்கள் பெற்றிருந்தால், அக்கடன்களுக்கு இந்திய கூட்டாண்மைச் சட்டம், 1932 –ன் படி வழங்கப்படும் வட்டி வீதம்.
   அ) ஆண்டுக்கு 8% ஆ) ஆண்டுக்கு 12% இ) ஆண்டுக்கு 5% ஈ) ஆண்டுக்கு 6%
6. பொருந்தாத ஒன்றைத் தேர்ந்தெடுக்கவும்.
   அ) கூட்டாளிகள் இலாபம் மற்றும் நட்டத்தை சமமாகப் பகிர்ந்து கொள்ள வேண்டும்.
   ஆ) கூட்டாளிகள் முதல் மீது வட்டி ஆண்டுக்கு 7% அனுமதிக்க வேண்டும்.
   இ) கூட்டாளிகளுக்கு சம்பளம் அல்லது ஊதியம் அனுமதிக்கப்படமாட்டாது
   ஈ) கூட்டாளிகளிடமிருந்து பெற்ற கடன் மீதான வட்டி ஆண்டுக்கு 6% அனுமதிக்க வேண்டும்.
7. கீழ் வருவனவற்றில் எது சரியானது?
   அ) உயர் இலாபம் = மொத்த இலாபம் / ஆண்டுகளின் எண்ணிக்கை
   ஆ) உயர் இலாபம் = கூட்டு இலாபம் / ஆண்டுகளின் எண்ணிக்கை
   இ) உயர் இலாபம் = சராசரி இலாபம் – சாதாரண இலாபம்
   ஈ) உயர் இலாபம் = சராசரி இலாபம் x கொள்முதல் ஆண்டுகள்
8. ஒரு வியாபாரத்தின் மொத்த மூலதன மதிப்பு ₹ 1,00,000; சொத்துகள் ₹ 1,50,000 மற்றும் பொறுப்புகள் , ₹ 80,000 மூலதனமாக்க முறையில் நற்பெயரின் மதிப்பு
   அ) ₹ 40,000 ஆ) ₹70,000 இ) ₹ 1,00,000 ஈ) ₹30,000
9. மறுமதிப்பீட்டுக் கணக்கு ஒரு
   அ) சொத்து க/கு ஆ) பெயரளவு க/கு இ) ஆள்சார் க/கு ஈ) ஆள்சாரா க/கு
10. பட்டியல் I மற்றும் பட்டியல் II உடன் ஒப்பீடு செய்து சரியான விடையை கீழே கொடுக்கப்பட்டுள்ள சரியான குறியீட்டை பயன்படுத்தி தெரிவு செய்யவும்.



Scanned with CamScanner
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

| பட்டியல் I | பட்டியல் II | | (i) | (ii) | (iii) | (iv) |
|---|---|---|---|---|---|---|
| (i) தியாக விகிதம் | 1. முதலீட்டு மாறுபடும் நிதி | அ) | 1 | 2 | 3 | 4 |
| (ii) பழைய இலாபம் பகிர்வு விகிதம் | 2. பகிர்ந்து தரா இலாபம் | ஆ) | 3 | 2 | 4 | 1 |
| (iii) மறுமதிப்பீட்டு கணக்கு | 3. நற்பெயர் | இ) | 4 | 3 | 2 | 1 |
| (iv) முதல் கணக்கு | 4. பதிவுறா பொறுப்பு | ஈ) | 3 | 1 | 2 | 4 |

11. ஒரு கூட்டாண்மையை நிறுவனத்தின் கூட்டாளியாக இருந்த A என்பவர் 2019 மார்ச் 31 அன்று இறந்துவிட்டார். அவருக்கு செலுத்தவேண்டிய இறுதித்தொகை ₹ 25,000 உடனடியாக செலுத்தப்படவில்லை. அது மாற்றப்பட வேண்டிய கணக்கு

அ) A - ன் முதல் கணக்கு ஆ) A - ன் கடன் கணக்கு

இ) A - ன் நிறைவேற்றாளர் கணக்கு ஈ) A - ன் நிறைவேற்றாளர் கடன் கணக்கு

12. A, B மற்றும் C என்ற கூட்டாளிகள் 4:2:3 என்ற விகிதத்தில் இலாப நட்டத்தை பகிர்ந்து வந்தனர். தற்போது C விலகுகிறார். A மற்றும் B யின் புதிய இலாபப் பகிர்வு விகிதம்

அ) 4:3 ஆ) 3:4 இ) 2:1 ஈ) 1:2

13. ஒறுப்பிழப்புச் செய்த பங்குகளை மறுவெளியீடு செய்தபிறகு, பங்கு ஒறுப்பிழப்புக் கணக்கின் இருப்பு மாற்றப்படுவது

அ) பொதுக்காப்பு கணக்கிற்கு ஆ) முதலினக் காப்பு கணக்கிற்கு

இ) பத்திர முனைமக் கணக்கிற்கு ஈ) உபரி கணக்கிற்கு

14. சரியான குறியீட்டைப் பயன்படுத்தி பொருத்தமான இணையை தேர்ந்தெடுக்கவும்

A) குறை ஒப்பம் – i) முன்கூட்டிச் செலுத்திய அழைப்பு பணம்

B) மிகை ஒப்பம் – ii) வெளியிட்ட பங்குகளைவிட அதிகமாக ஒப்பப்பட்டது

C) அழைப்பு நிலுவை – iii) வெளியிட்ட பங்குகளைவிட குறைவாக ஒப்பப்பட்டது

D) அழைப்பு முன்பணம் – iv) செலுத்தப்பெறாத அழைப்பு பணம்

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| அ) | (i) | (ii) | (iii) | (iv) |
| ஆ) | (iv) | (iii) | (ii) | (i) |
| இ) | (iii) | (ii) | (iv) | (i) |
| ஈ) | (iii) | (iv) | (i) | (ii) |

15. நிதி என்னும் சொல் குறிப்பிடுவது

அ) நடப்புப் பொறுப்புகள் ஆ) நடைமுறை முதல் இ) நிலைச் சொத்துகள் ஈ) நீண்டகாலச்சொத்துகள்

16. ஒரு வணிகத்தின் முதலாம் ஆண்டுச் செலவுகள் ரூ 80,000 இரண்டாம் ஆண்டில் செலவுகள் ரூ 88,000 ஆக அதிகரித்திருந்தது. இரண்டாம் ஆண்டின் போக்கு விகிதம் என்ன?

அ) 10% ஆ) 110% இ) 90% ஈ) 11%

17. பட்டியல் ஒன்றை பட்டியல் இரண்டுடன் பொருத்தி கொடுக்கப்பட்டுள்ள குறியீட்டைப் பயன்படுத்தி சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்

| பட்டியல் I | | பட்டியல் II |
|---|---|---|
| அ) நடப்பு விகிதம் | – | 1. நீர்மை தன்மை |
| ஆ) நிகர இலாப விகிதம் | – | 2. செயல்திறன் |
| இ) புற அக பொறுப்புகள் விகிதம் | – | 3. நீண்டகால கடன் தீர்க்கும் திறன் |
| ஈ) சரக்கிருப்பு சுழற்சி விகிதம் | – | 4. இலாபத்தன்மை |

குறியீடுகள் அ) 1 4 3 2 ஆ) 3 2 4 1 இ) 4 3 2 1 ஈ) 1 2 3 4



Scanned with CamScanner
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

18. நடப்பு பொறுப்பு ரூ40,000; நடப்புச் சொத்து ரூ1,00,000; சரக்கிருப்பு ரூ 20,000 எனில் விரைவு விகிதம்

அ) 1:1 ஆ) 2:5:1 இ) 2:1 ஈ) 1:2

19. F11 எனும் பயன்பாடு

அ) நிறுவனப் பண்பு கூறுகள் ஆ) கணக்கியல் சான்றாவணங்கள்

இ) நிறுவன கட்டமைப்பு ஈ) இவைகளில் எதுவுமில்லை

20. Tally - ல் முன்பே வரையறுக்கப்பட்ட பேரேடுகள்?

i) ரொக்கம் ii) இலாப நட்டக் க/கு iii) முதல் க/கு

அ) i) மட்டும் ஆ) (ii) மட்டும் இ) i) மற்றும் (ii) இவை இரண்டும்

ஈ) (ii) மற்றும் (iii) இவை இரண்டும்

II. ஏதேனும் 7 வினாக்களுக்கு விடையளி. 7x2=14

வினா எண் 30 கட்டாய வினா.

21. இரட்டைப்பதிவு முறை பின்பற்றாத போது சிறிய அளவிலான தனி வணிகர் பொதுவாக பராமரித்து வரும் கணக்குகளைத் தருக.

22. உயர் இலாபம் என்றால் என்ன? 23. தியாக விகிதம் என்றால் என்ன?

24. பத்திர முனைமக் கணக்கு பற்றி சிறுகுறிப்பு வரையவும்.

25. நடைமுறை முதல் என்றால் என்ன? 26. Tally. ERP 9- ல் குழு என்றால் என்ன?

27. பின்வரும் விவரங்கள் சீர்காழி பாடகர்கள் சங்கத்தின் வருவாய் மற்றும் செலவினக் கணக்கில் எவ்வாறு தோன்றும் எனக் காட்டவும்.

| | ரூ |
|---|---|
| 1.4.2018 அன்று எழுதுபொருள்கள் இருப்பு | 2,600 |
| அவ்வாண்டில் வாங்கிய எழுதுபொருள்கள் | 6,500 |
| 31.3.2019 அன்று எழுதுபொருள்கள் இருப்பு | 2,200 |

28. மணி என்ற கூட்டாளி 2018, செப்டம்பர் 1 அன்று ₹ 30,000 எடுத்துக்கொண்டார். எடுப்புகள் மீது வட்டி ஆண்டுக்கு 6% என கணக்கிடப்பட வேண்டும். 2018, டிசம்பர் 31 அன்று எடுப்புகள் மீது வட்டி கணக்கிட்டு மாறுபடும் முதல் முறையில் அதற்குரிய குறிப்பேட்டுப் பதிவுகளைத் தரவும்.

29. தீனா, சூர்யா மற்றும் ஜானகி என்ற கூட்டாளிகள் 5:3:2 என்ற விகிதத்தில் இலாபம் மற்றும் நட்டங்களைப் பகிர்ந்து வந்தனர். 31.3.2018 அன்று தீனா கூட்டாண்மையை விட்டு விலகினார். அவருடைய விலகலின்போது நிறுவனத்தின் கணக்கேடுகள் ரூ 50,000 காப்பு நிதியினைக் காட்டியது. காப்பு நிதியினை மாற்றுவதற்கு தேவையான குறிப்பேட்டுப் பதிவினைத் தரவும்.

30. கீழ்க்கண்ட தகவல்களிலிருந்து விரைவு விகிதத்தைக் கணக்கிடவும். மொத்த நடப்புப் பொறுப்புகள் ₹2,40,000; மொத்த நடப்புச் சொத்துகள் ₹4,50,000; சரக்கிருப்பு ₹70,000; முன்கூட்டிச் செலுத்திய செலவுகள் ₹20,000.

III. ஏதேனும் 7 வினாக்களுக்கு விடையளி. வினா எண் 40 கட்டாய வினா. 7x3=21

31. நிலை முதல் முறைக்கும், மாறுபடும் முதல் முறைக்கும் இடையேயான வேறுபாடுகளைத் தரவும்.

32. சொத்துகள் மற்றும் பொறுப்புகள் மறுமதிப்பீடு செய்வதற்கான குறிப்பேட்டுப் பதிவுகள் யாவை?

33. கூட்டாளி விலகலின்போது செய்யப்பட வேண்டிய சரிக்கட்டுதல்களை பட்டியலிடவும்.

34. Tally.ERP.9. ல் பொதுவாக பயன்படுத்தப்படும் சான்றாவணங்களின் வகைகளை குறிப்பிடவும்.

35. பின்வரும் விவரங்களைக் கொண்டு அவ்வாண்டின் மொத்த விற்பனையைக் கண்டறியவும்.



Scanned with CamScanner
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

| விவரம் | ₹ |
|---|---|
| 2018, ஏப்ரல் 1 அன்று கடனாளிகள் | 50,000 |
| அவ்வாண்டில் கடனாளிகளிடமிருந்து பெற்ற ரொக்கம் | 1,50,000 |
| உள்திருப்பம் | 15,000 |
| வாராக் கடன் | 5,000 |
| 2019, மார்ச் 31 அன்று கடனாளிகள் | 70,000 |
| ரொக்க விற்பனை | 1,40,000 |

36. காரைக்குடி விளையாட்டு மன்றத்தின் 2019, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய இறுதிக் கணக்குகளில் பின்வருவன எவ்வாறு தோன்றும் எனக் காட்டவும்.

| விவரம் | ₹ |
|---|---|
| 2018, ஏப்ரல் 1 அன்று தொடர்விளையாட்டுப் போட்டி நிதி | 90,000 |
| 2018, ஏப்ரல் 1 அன்று தொடர்விளையாட்டுப்போட்டி நிதி முதலீடு | 90,000 |
| தொடர் விளையாட்டுப் போட்டி நிதி முதலீடு மீதான வட்டி பெற்றது | 9,000 |
| தொடர் விளையாட்டுக் போட்டி நிதிக்கான நன்கொடை | 10,000 |
| தொடர் விளையாட்டுப் போட்டிச் செலவுகள் | 60,000 |

37. கடந்த 4 ஆண்டுகள் சராசரி இலாபத்தில் 3 ஆண்டுகள் கொள்முதல் என்ற அடிப்படையில் கூட்டு சராசரி இலாபத்தினை பயன்படுத்தி, நற்பெயரின் மதிப்பைக் கணக்கிடவும்.

| ஆண்டு | இலாபம் ₹ | நிறைகள் |
|---|---|---|
| 2015 | 10,000 | 1 |
| 2016 | 12,000 | 2 |
| 2017 | 16,000 | 3 |
| 2018 | 18,000 | 4 |

38. கௌதம் வரையறு நிறுமம், இராகவ் அவர்களின் ₹ 10 மதிப்பிலான 500 நேர்மைப் பங்குகளின் இறுதி அழைப்பு ₹ 2 செலுத்தாத காரணத்தினால் ஒறுப்பிழப்பு செய்தது. ஒறுப்பிழப்பு செய்யப்பட்ட பங்குகள், மதன் என்பவருக்கு பங்கு ஒன்று ₹ 8 வீதம் மறுவெளியீடு செய்யப்பட்டது. ஒறுப்பிழப்பு மற்றும் மறுவெளியீட்டிற்கான குறிப்பேட்டு பதிவுகளைத் தரவும்.

39. பரணி நிறுமத்தின் பின்வரும் தகவல்களிலிருந்து, ஒப்பீட்டு வருமான அறிக்கையைத் தயாரிக்கவும்.

| விவரம் | 2016-17 ₹ | 2017-18 ₹ |
|---|---|---|
| விற்பனை மூலம் பெற்ற வருவாய் | 30,000 | 45,000 |
| இதர வருமானம் | 4,000 | 6,000 |
| செலவுகள் | 10,000 | 15,000 |
| வருமான வரி | 30% | 30% |

40. இலக்குமி நிறுமத்தின் 2019, மார்ச் 31 ஆம் நாளைய இருப்புநிலைக் குறிப்பு பின்வருமாறு.



Scanned with CamScanner
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

| விவரம் | ₹. |
|---|---|
| **I.பங்கு மூலதனம் மற்றும் பொறுப்புகள்** | |
| 1. பங்குதாரர் நிதி நேர்மைப் பங்கு முதல் | 4,00,000 |
| 2.நீண்ட கால பொறுப்புகள், நீண்ட காலக் கடன்கள் | 2,00,000 |
| 3. நடப்பு பொறுப்புகள் | |
| அ)குறுகிய காலக் கடன்கள் | 50,000 |
| ஆ) கணக்குகள் மூலம் செலுத்த வேண்டியவை | 3,10,000 |
| இ) இதர நடப்புப் பொறுப்புகள் கொடுக்கப்பட வேண்டிய செலவுகள் | 15,000 |
| ஈ) குறுகிய கால ஒதுக்குகள் | 25,000 |
| **மொத்தம்** | **10,00,000** |
| **II.சொத்துகள்** | |
| 1. நீண்ட காலச் சொத்துகள் | |
| அ) நிலைச்சொத்துகள் புலனாகும் சொத்துகள் | 4,00,000 |
| 2.நடப்புச் சொத்துகள் | |
| அ) சரக்கிருப்பு | 1,60,0000 |
| ஆ) வணிகக் கடனாளிகள் | 3,20,000 |
| இ) ரொக்கம் மற்றும் ரொக்கத்திற்கு சமமானவைகள் | 80,000 |
| ஈ) இதர நடப்புச் சொத்துகள் முன்கூட்டிச் செலுத்திய செலவுகள் | 40,000 |
| **மொத்தம்** | **10,00,000** |

1. நடப்பு விகிதம் 2. விரைவு விகிதம் கணக்கிடவும்.

**IV. அனைத்து வினாக்களுக்கும் விடையளி.** **7x5=35**

41. அ) பின்வரும் விவரங்களிலிருந்து மொத்தக் கொள்முதலைக் கணக்கிடவும்.

| விவரம் | ₹ |
|---|---|
| 2017 ஏப்ரல் 1 அன்று பற்பல கடனீந்தோர் | 75,000 |
| 2017, ஏப்ரல் 1 அன்று செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு | 60,000 |
| கடனீந்தோருக்குச் செலுத்திய ரொக்கம் | 3,70,000 |
| செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டுக்கு செலுத்தியது | 1,00,000 |
| கொள்முதல் திருப்பம் | 15,000 |
| ரொக்கக் கொள்முதல் | 3,20,000 |
| 2018, மார்ச் 31 அன்று கடனீந்தோர் | 50,000 |
| 2018, மார்ச் 31 அன்று செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு | 80,000 |

(அல்லது)

ஆ) பிரபு, ரகு மற்றும் சிவா என்ற கூட்டாளிகள் 3:2:1 எனும் விகித்தில் இலாப நட்டம் பகிர்ந்து வந்தனர். 2017 ஏப்ரல், 1 ஆம் நாளன்று பிரபு கூட்டாண்மையிலிருந்து விலகினார். பின்வரும் சரிக்கட்டுதல்கள், மேற்கொள்ளப்பட வேண்டும்.

1. கட்டடத்தின் மதிப்பு ரூ 12,000 உயர்த்துவது



Scanned with CamScanner
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

2. அறைகலன் மதிப்பை ரூ 8,500 குறைப்பது 3. கொடுபடா சம்பளத்திற்காக ரூ 6,500 ஒதுக்கு உருவாக்குவது குறிப்பேட்டுப் பதிவுகள் தந்து மறுமதிப்பீட்டுக் கணக்கு தயாரிக்கவும்.

42. அ) ராஜு முறையான கணக்கேடுகளைப் பின்பற்றுவதில்லை. அவருடைய பதிவேடுகளிலிருந்து பெறப்பட்ட தகவல்கள் பின்வருமாறு.

| விவரம் | 1.1.2018 ₹ | 31.12.2018 ₹ |
|---|---|---|
| கைரொக்கம் | 80,000 | 90,000 |
| சரக்கிருப்பு | 1,80,000 | 1,40,000 |
| கடனாளிகள் | 90,000 | 2,00,000 |
| பற்பல கடனீந்தோர் | 1,30,000 | 1,95,000 |
| வங்கிக் கடன் | 60,000 | 60,000 |
| செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு | 80,000 | 45,000 |
| பொறி மற்றும் இயந்திரம் | 1,70,000 | 1,70,000 |

அவ்வாண்டில் அவர் கொண்டு வந்த கூடுதல் முதல் ரூ 50,000 மற்றும் அவர் வியாபாரத்திலிருந்து தன்னுடைய சொந்தபயனுக்காக மாதந்தோறும் ரூ 2,500 எடுத்துக்கொண்டார். மேற்கண்ட தகவல்களிலிருந்து இலாப நட்ட அறிக்கை தயாரிக்கவும். (அல்லது)

ஆ) புராகிரஸ் வரையறு நிறுமம் 50,000 சாதாரணப் பங்குகளை,பங்கொன்று ரூ 10 வீதம் வெளியிட்டது. விண்ணப்பத்தின் போது ரூ 2, ஒதுக்கீட்டின் போது ரூ 4 முதலாவது அழைப்பின் போது ரூ 2 மற்றும் இரண்டாவது அழைப்பின் போது ரூ 2 செலுத்தப்பட வேண்டும்.அனைத்து பங்குகளும் ஒப்பப்பட்டன மற்றும் அனைத்து தொகைகளும் முறையாக பெறப்பட்டன. குறிப்பேட்டுப் பதிவுகள் தரவும்

43. அ) கீழே கொடுக்கப்பட்டுள்ள தகவல்களிலிருந்து கோயம்பத்தூர் கிரிக்கெட் மன்றத்தின் 2019, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கைத் தயார் செய்யவும்.

| விவரம் | ₹ | ₹ | விவரம் | ₹ |
|---|---|---|---|---|
| வங்கி மேல்வரைப்பற்று (1.4.2018) | | 6,000 | மதிப்பூதியம் செலுத்தியது | 2,800 |
| கைரொக்கம் (1.4.2018) | | 1,000 | நீர் மற்றும் மின்சாரக் கட்டணம் | 700 |
| மைதான பராமரிப்பிற்காக | | | விளையாட்டுப் போட்டிச் செலவுகள் | 2,600 |
| கூலி செலுத்தியது | | 2,000 | விளையாட்டுப் பொருள்கள் வாங்கியது | 1,900 |
| சந்தா பெற்றது: முந்தைய ஆண்டு | 500 | | விளையாட்டுப் போட்டி நிதி வரவுகள் | 5,200 |
| நடப்பு ஆண்டு | 9,600 | | உயில்கொடைப் பெற்றது | 2,000 |
| எதிர்வரும் ஆண்டு | 400 | 10,500 | ரொக்க இருப்பு (31.3.2019) | 300 |
| கூலி கொடுபட வேண்டியது | | 2,200 | அரங்கம் அமைப்பதற்காக பெற்ற நன்கொடை | 2,000 |
| கடன்மீதான வட்டி செலுத்தியது | | 2,000 | | |

(அல்லது)

ஆ) விஸ்வநாதன் அறைகலன் வரையறு நிறுமம், ஒன்று ரூ 10 வீதம் 20,000 நேர்மைப் பங்குகளைப் பங்கொன்றிற்கு ரூ 2 முனைமத்தில் வெளியிட அழைப்பு விடுத்தது.

ரூ 2 விண்ணப்பத்தின் மீதும்

ரூ 5 (முனைமம் உள்பட) ஒதுக்கீட்டின் மீதும்

ரூ 5 முதலாம் மற்றும் இறுதி அழைப்பின் மீதும்

மிகை ஒப்பமாக 30,000 பங்குகளுக்கான விண்ணப்பங்கள் பெறப்பட்டன. கூடுதலாக பெறப்பட்ட விண்ணப்பங்கள் இயக்குனர்களால் நிராகரிக்கப்பட்டன. அனைத்துத் தொகையும் பெறப்பட்டன. குறிப்பேட்டுப் பதிவினைத் தரவும்.



Scanned with CamScanner

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

44. அ) கீழ்க்காணும் கும்பகோணம் கூடைப்பந்து சங்கத்தின் பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கிலிருந்து 2018, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய வருவாய் மற்றும் செலவினக் கணக்கைத் தயார் செய்யவும்.

| பெறுதல்கள் | | ₹ | செலுத்தல்கள் | | ₹. |
|---|---|---|---|---|---|
| இருப்பு கீ/கொ | | | மைதான வாடகை செலுத்தியது | | 12,000 |
| கைரொக்கம் | 23,000 | | அச்சுக் கட்டணம் | | 5,000 |
| வங்கி ரொக்கம் | 12,000 | 35,000 | வங்கிக் கட்டணம் | | 1,000 |
| அரங்க வாடகை பெற்றது | | 6,000 | கட்டடம் மீதான காப்பீடு | | 2,000 |
| சந்தா பெற்றது | | 9,000 | தொடர் விளையாட்டுப் போட்டிச் செலவுகள் | | 16,000 |
| ஆயுள் உறுப்பினர் கட்டணம் | | 7,000 | தணிக்கைக் கட்டணம் | | 3,000 |
| பாதுகாப்பு பெட்டக வாடகை பெற்றது | | 2,000 | விளையாட்டுப் பொருள்கள் வாங்கியது | | 4,000 |
| | | | இருப்பு கீ/இ | | |
| | | | கைரொக்கம் | 2,000 | |
| | | | வங்கி ரொக்கம் | 14,000 | 16,000 |
| | | 59,000 | | | 59,000 |

(அல்லது)

ஆ) முத்து நிறுமத்தின் பின்வரும் தகவல்களிலிருந்து ஒப்பீட்டு நிதிநிலை அறிக்கையைத் தயாரிக்கவும்.

| | விவரம் | 31st மார்ச், 2017 | 31st மார்ச், 2018 |
|---|---|---|---|
| I | பங்கு மூலதனம் மற்றும் பொறுப்புகள் | ₹ | ₹ |
| | பங்குதாரர் நிதி | 4,00,000 | 4,40,000 |
| | நீண்ட காலப் பொறுப்புகள் | 1,50,000 | 1,65,000 |
| | நடப்புப் பொறுப்புகள் | 75,000 | 82,500 |
| | மொத்தம் | 6,25,000 | 6,87,500 |
| II | சொத்துகள் | | |
| | நீண்டகாலச் சொத்துகள் | 5,00,000 | 6,00,000 |
| | நடப்புச் சொத்துகள் | 1,25,000 | 87,500 |
| | மொத்தம் | 6,25,000 | 6,87,500 |

45. அ) தினேஷ் மற்றும் சுகுமார் 2018, ஜனவரி 1 அன்று கூட்டாண்மை ஒப்பந்தத்தில் ஈடுபட்டனர். தினேஷ் ரூ 1,50,000 மற்றும் சுகுமார் ரூ 1,20,000 முதலாக கொண்டு வந்தனர். ஒப்பந்தம் பின்வருவனவற்றைக் கொண்டுள்ளது. (1.)தினேஷ் மற்றும் சுகுமார் இலாபநட்டங்களை 2:1 என்ற விகிதத்தில் பகிரவேண்டும். (2.) கூட்டாளிகளுக்கு முதல் மீது வட்டி ஆண்டுக்கு 4% தரப்பட வேண்டும். (3)எடுப்புகள் மீதான வட்டி கணக்கிடப்பட வேண்டியது தினேஷ் ரூ 3,600 மற்றும் சுகுமார் ரூ 2,200 (4.) தினேஷிற்கு சம்பளம் ஆண்டுக்கு ரூ 60,000 வழங்கப்பட வேண்டும் மற்றும் (5)சுகுமாருக்கு தரப்படவேண்டிய கழிவு ரூ 80,000. 2018, டிசம்பர் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டில் வட்டி, சம்பளம் மற்றும் கழிவு போன்றவற்றை சரிக்கட்டுவதற்கு முன் நிறுவனம் ஈட்டிய இலாபம் ரூ 2,20,000 இலாப நட்டப் பகிர்வு கணக்கைத் தயாரிக்கவும்.

ஆ) ராணி நிறுமத்தின் பின்வரும் தகவல்களிலிருந்து பொது அளவு நிதிநிலை அறிக்கையினைத் தயார் செய்யவும்.

| | விவரம் | 2016 மார்ச்,31 ₹ | 2017 மார்ச், 31 ₹ |
|---|---|---|---|
| I | பங்கு மூலதனம் மற்றும் பொறுப்புகள் | | |
| | பங்குதாரர் நிதி | 5,40,000 | 6,00,000 |
| | நீண்டகால பொறுப்புகள் | 2,70,000, | 2,50,000 |
| | நடப்பு பொறுப்புகள் | 90,000 | 1,50,000 |
| | மொத்தம் | 9,00,000 | 10,00,000 |
| II | சொத்துகள் | | |
| | நீண்டகாலச் சொத்துகள் | 7,20,000 | 8,00,000 |
| | நடப்புச் சொத்துகள் | 1,80,000 | 2,00,000 |
| | மொத்தம் | 9,00,000 | 10,00,000 |



Scanned with CamScanner
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

46. அ) கூட்டாண்மை அடிப்படையில் நடத்தப்படும் ஒரு வணிகத்தின் விவரங்கள் பின்வருமாறு:

1. ஈட்டிய இலாபங்கள்: 2016: ரூ 25,000; 2017: ரூ 23,000 மற்றும் 2018: ரூ 26,000
2. 2016 ஆம் ஆண்டின் இலாபத்தில் திரும்பத் திரும்ப நிகழா வருமானம் ரூ 2,500 சேர்ந்துள்ளது.
3. சரக்கிருப்பு தீயினால் சேதமடைந்ததால் 2017 ஆம் ஆண்டின் இலாபத்தில் ரூ 3,500 குறைக்கப்பட்டது.
4. சரக்கிருப்பு காப்பீடு செய்யப்படவில்லை. ஆனால் எதிர்காலத்தில் காப்பீடு செய்வதென முடிவு செய்யப்பட்டது அதற்கான காப்பீட்டுக் கட்டணம் ஆண்டுக்கு ரூ 250 என மதிப்பிடப்பட்டது.

3. ஆண்டுகள் சராசரி இலாபத்தில் 2 ஆண்டுகள் கொள்முதல் என்ற அடிப்படையில் நற்பெயரின் மதிப்பைக் கணக்கிடவும்.

(அல்லது)

ஆ) ஜேம்ஸ் நிறுவனத்தின் பின்வரும் 31.03.2019 ஆம் நாளைய இருப்புநிலைக் குறிப்பிலிருந்து கீழ்க்காணும் விகிதங்களைக் கணக்கிடவும். 1. புற அக பொறுப்புகள் விகிதம் 2. உரிமையாளர் விகிதம் 3. முதல் உந்துதிறன் விகிதம்

ஜேம்ஸ் நிறுமத்தின் 31.03.2019 ஆம் நாளைய இருப்புநிலைக்குறிப்பு

| விவரம் | தொகை |
|---|---|
| I. பங்கு மூலதனம் மற்றும் பொறுப்புகள் | |
| பங்குதாரர் நிதி | |
| அ) பங்கு முதல் | |
| நேர்மைப் பங்கு முதல் | 2,50,000 |
| 6% முன்னுரிமைப் பங்கு முதல் | 2,00,000 |
| ஆ) காப்புகள் மற்றும் மிகுதி | 1,50,000 |
| 2. நீண்டகால பொறுப்புகள் | |
| நீண்டகாலக் கடன்கள் (8%கடனீட்டுப் பத்திரங்கள்) | 3,00,000 |
| 3. நடப்புப்பொறுப்புகள் | |
| அ) வங்கியிலிருந்து பெற்ற குறுகியகாலக் கடன்கள் | 2,00,000 |
| ஆ) கணக்குகள் மூலம் செலுத்த வேண்டியவைகள் | 1,00,000 |
| மொத்தம் | 12,00,000 |
| II. சொத்துகள் | |
| 1. நீண்டகாலச் சொத்துகள் | |
| நிலைச்சொத்துகள் | 8,00,000 |
| 2. நடப்புச்சொத்துகள் | |
| அ) சரக்கிருப்பு | 1,20,000 |
| ஆ) கணக்குகள் மூலம் பெறவேண்டியவைகள் | 2,65,000 |
| இ) ரொக்கம் மற்றும் ரொக்கத்திற்குச சமமானவைகள் | 10,000 |
| ஈ) இதர நடப்புச் சொத்துகள் முன்கூட்டிச் செலுத்திய செலவுகள் | 5,000 |
| மொத்தம் | 12,00,000 |

47. அ) அமல் மற்றும் விமல் இருவரும் ஒரு கூட்டாண்மை நிறுவனத்தின் கூட்டாளிகள். அவர்கள் 7:5 என்ற விகிதத்தில் இலாபங்கள் மற்றும் நட்டங்களை பகிர்ந்து வந்தனர். 2019, மார்ச் 31 அன்றைய அவர்களின் இருப்புநிலைக் குறிப்பு பின்வருமாறு.

| பொறுப்புகள் | ₹ | ₹ | சொத்துகள் | ₹ |
|---|---|---|---|---|
| முதல் கணக்குகள் | | | கட்டடம் | 80,000 |
| அமல் | 70,000 | | அறைகலன் | 20,000 |
| விமல் | 50,000 | 1,20,000 | சரக்கிருப்பு | 25,000 |
| பற்பல கடனீந்தோர் | | 30,000 | கடனாளிகள் | 30,000 |
| இலாப நட்ட க/கு | | 24,000 | வங்கி | 19,000 |
| | | 1,74,000 | | 1,74,000 |

1.4.2019 இல் நிர்மல் புதிய கூட்டாளியாக சேருகிறார். அவர் ரூ 30,000 முதலுடன் எதிர்கால இலாபப்பங்கில் 1/3 விகிதத்தில், பின்வரும் சரிக்கட்டலுடன் கூட்டாளியாகிறார்.

அ) சரக்கிருப்பின் மதிப்பு ரூ 5,000 குறைக்கப்பட வேண்டும்.

ஆ) வாரா ஐயக்கடன் ஒதுக்கு ரூ 3,000 உருவாக்கப்பட வேண்டும்.

இ) கட்டடம் ரூ 20,000 மதிப்பேற்றம் செய்யப்பட வேண்டும். மறுமதிப்பீட்டுக் கணக்கு மற்றும் கூட்டாளி சேர்க்கைக்கு பின்பான கூட்டாளி முதல் கணக்கு தயார் செய்யவும். (அல்லது)

ஆ) கணினிமயக் கணக்கியல் முறையின் பயன்பாடுகளில் ஏதேனும் ஐந்தினை விளக்கவும்.



Scanned with CamScanner
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com